அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார்
# சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு ஆடி - ஆவணி ஆகஸ்ட் 2017 முரசு 10 ஒலி 122



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# குருவாசகம்

பிரம்ம, விஷ்ணு, ருத்திராதிகளுடைய பதங்களும் அந்தக் கர்த்தாக்களும் அவர்களால் சிருட்டி, திதி, சங்காரம் செய்யப்பட்டு வருகின்ற தேகாதி பிரபஞ்சங்களும் அனித்தியம் ஆகலில் நித்தியமாகியும் என்றும் ஒரு தன்மையுள்ளதாகியும் சச்சிதானந்த வடிவாகியும் அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப் பொருள்.

தாய், தந்தை, குரு, தெய்வம், சிநேகர், உறவினர் முதலியவர்களும் சிவத்தின் திருவருளேயல்லது வேறில்லை.

நாம் பல ஜனனங்களையும் தப்பி மேலான இந்த மனிதப்பிறவி எடுத்தது சிவத்தின் திருவருளைப் பெறுவதற்கே. எவ்வகைப் பிரயாசத்தினாலாவது அந்த அருளை அடைய வேண்டும். அந்த அருள் எவ்வகையால் வருமென்றால் எல்லா உயிர்களிடத்திலும் தயவும் பிரபஞ்சத்தில் வெறுப்பும் சிவத்தினிடத்தில் அன்பும் மாறாது நம்மிடத்திருந்தால் அவ்வருள் நம்மை அடையும். நாமும் அதனை அடைந்து எதிரற்ற சுகத்திலிருப்போம். இது சத்தியம்.

## வடலூர் மாதப் பூசம் நாட்கள்



| 19.08.2017 | 16.09.2017 |
| --- | --- |
| சனிக்கிழமை | சனிக்கிழமை |
| ஆவணி 03 | ஆவணி 31 |



# திருச்செவிக்கு விண்ணப்பம்

அண்டபிண்ட முதலிய எல்லாவற்றிற்கும் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய பூரணரே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை யுண்மைத்தரத்தை அறிதல்வேண்டும் என்றும், இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் கருதுதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தல் வேண்டுமென்றும், எனது உள்ளகத்தே ஓவாதுறைந் தூற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகுகின்ற பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்றது ஆகலின், 'அறிவாரறிகின்ற வண்ணங்களும், கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் ஆகிய எல்லா வண்ணங்களையும் உடையவர் அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங்கடவுள்' என்ற சத்திய ஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாக் கொண்டு, தன்மைசாலாத் தமியேன் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்குந் தொடங்கினேன்.

இங்ஙனந் தொடங்குதற்கு முன்னர், எனதறிவிற்கும் கருத்திற்கும் நாவிற்கும் இயல்வனவாகத் தோற்றிய வண்ணங்களுள் ஒன்றேனும் ஈண்டு இயற்படத் தோற்றாமையின், அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை வண்ணங்கள், எத்தன்மையவோ! எத்தன்மையவோ! வென்று உணர்ந்து உணர்ந்து கருதிக்கருதி உரைத்துரைத்து அதிசயிக்கின்றவனானேன்.

இயற்கை உண்மைத் தனிப்பெரும் பொருளாயும் இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும் இயற்கையின்பத் தனிப்பெருஞ் சுகமாயும் பிரிவின்றி நிறைந்த பெருந்தன்மையராய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருள் வலத்தால் பொறி, புலன், கரண முதலிய தத்துவங்கள் அனைத்தையும் வென்று நின்மலராகித் தத்துவாந்தத்தில் நின்று தம்முண்மை யுணர்ந்து இயற்கை உணர்ச்சியைப் பெற்று இயற்கையுண்மைக்கண் இயற்கை இன்பானுபவஞ் செய்கின்ற சுத்த யோகாந்தர்களும், சுத்த கலாந்தர்களும், சுத்த போதாந்தர்களும், சுத்த நாதாந்தர்களும், சுத்த வேதாந்தர்களும், சுத்த சித்தாந்தர்களுமாகிய சுத்த சன்மார்க்க ஞானிகளின் திருக்கூட்டங்களை நன் முயற்சியாற் றனித்தனி யடைந்து பத்தியாற் பணிந்து அற்புதப் பெருஞ் செயல் புரிகின்ற ஐயர்களே! அருட்பெருஞ்ஜோதித் தனிப் பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுகம் இருந்த வண்ணம் உள்ளம் உவந்துரைத் தருளல் வேண்டும்.

- திருஅருட்பா வசனபாகம்

## மோட்சத்தின் திறவுகோல்

**ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்சவீட்டின் திறவுகோல்**

*தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என புருஷார்த்தங்கள் நான்கு. புருடன் – மனிதன் (மக்கள்). அர்த்தம் – அடையவேண்டிய உறுதிப்பொருள்.*

*புருடார்த்தம் – புருடராகப் பிறந்தோர் (மக்கட் பிறப்பினர்) அடைய வேண்டிய பிறவிப்பயன். வள்ளற்பெருமான் இப்பிறவிப் பயனை ஆன்மலாபம் என்று கூறுவார்.*

*அறம், பொருள், இன்பங்களின் பயன் வீடு பெறுவதே. அறவழியில் பொருளீட்டி இன்பந்துய்த்து வீடுபெற வேண்டும்.*

*அறவழியில் பொருளீட்ட வேண்டும்.*

*அறவழியில் இன்பந் துய்க்க வேண்டும்.*

*அறவழியில் வீடு பெறவேண்டும்.*

*அறங்கள் அனைத்திலும் பெரிய அறம் ஜீவகாருண்ய அறம், ஜீவகாருண்யப் பேரறம்.*

*ஜீவகாருண்ய வழியில் பொருளீட்டி, ஜீவகாருண்ய இன்பத்தை (ஈத்துவக்கும் இன்பத்தை)த் துய்த்து, ஜீவகாருண்யப் பயனாகிய வீட்டை (பேரின்ப வீட்டை – மோட்ச வீட்டை)ப் பெறவேண்டும்.*

*அந்த வீடு மிகவும் பாதுகாப்பான வீடு, சொந்த வீடு, நிரந்தரமான வீடு, நித்தியமான வீடு, பெரிய வீடு, மாளிகை, கடவுள் வசிக்கும் வீடு. அந்த வீட்டில் அவரோடு நாமும் வசிக்கப் போகிறோம்.*

*பிரம்ம, விஷ்ணு, ருத்திரர்களை வாயிற் காப்போராகக் கொண்ட அக்கடவுட் பேரில்லம், பெரிய கெட்டிப்பூட்டால் கெட்டியாகப் பூட்டப்பட்டிருக்கும். பூட்டைத் திறப்பதற்கு ஒரேஒரு சாவிதான் உண்டு.*

*அந்தச் சாவியின் பெயர் ஜீவகாருண்யம். அதற்கு இரண்டு நாக்குகள் ("லிவர்"கள்) உண்டு. ஒரு நாக்கு அற்றார் அழிபசி தீர்த்தல். இன்னொரு நாக்கு புலால் மறுத்தல், இந்த இரண்டு லிவர் சாவியால் தான், ஜீவகாருண்யத்தால்தான் பூட்டைத் திறந்து உள்ளே புக இயலும்.*

*ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்ச வீட்டின் திறவுகோல் எனக்கூறி விளக்க, எழுதப்பெற்றதே. ஜீவகாருண்ய ஒழுக்கம் எனும் அருள் நூல்.*

*சன்மார்க்க சித்தியைப் பெறுவதற்கு முதற்சாதனம் ஜீவகாருண்யம் என்பதால்தான் இந்நூல் "சுத்த சன்மார்க்கத்தின் முதற் சாதனமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம்" என்று அருமையான ஒரு பெரும் பெயரைப் பெற்றது.*

ஜீவகாருண்யம் என்கின்ற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும். ஆகலில், ஜீவகாருண்யம் என்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலைக் காலமுள்ள போதே சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள் என்று நம் பெருமான் உபதேசிகின்றார். ஒரு 16 அடுக்கு மாளிகையாகில்

| | | |
|---|---|---|
| 16 | ஞானத்தில் ஞானம் | |
| 15 | ஞானத்தில் யோகம் | ஞானயோகம் |
| 14 | ஞானத்தில் கிரியை | ஞானக்கிரியை |
| 13 | ஞானத்தில் சரியை | ஞானசரியை |
| 12 | யோகத்தில் ஞானம் | |
| 11 | யோகத்தில் யோகம் | |
| 10 | யோகத்தில் கிரியை | யோகக் கரியை |
| 9 | யோகத்தில் சரியை | யோக சரியை |
| 8 | கிரியையில் ஞானம் | |
| 7 | கிரியையில் யோகம் | கிரியாயோகம் |
| 6 | கிரியையில் கிரியை | |
| 5 | கிரியையில் சரியை | |
| 4 | சரியையில் ஞானம் | |
| 3 | சரியையில் யோகம் | |
| 2 | சரியையில் கிரியை | |
| 1 | சரியையில் சரியை | |

16வது மாடியில் வசிக்கும் ஒரு குடும்பத்தார் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்கக் கடைவீதிக்குச் சென்று திரும்பினர். மின்தூக்கி (லிப்ட் lift) இயங்கவில்லை. மின்சாரம் வர வெகுநேரம் ஆகும்போல் இருந்தது. படிஏறியே சென்றுவிடலாம் என்று பைகளை எல்லாம் தரைதளத்தில் மின்தூக்கி அருகில் வைத்துவிட்டு வெறுங்கையை வீசிக் கொண்டு படி ஏறத் தொடங்கினர். களைப்புத் தோன்றாதிருக்கப் பிள்ளைகள் நால்வரும் ஆளுக்கொரு கதை சொல்லிக்கொண்டே ஏறுவது என்பது ஏற்பாடு. மூத்தமகன் குடும்பக்கதை ஒன்றை 4 மாடி ஏறும்வரை, இரண்டாவது மகன் எட்டாம் மாடிவரை வீரக்கதை, மூன்றாவது பெண் துப்பறியும் கதை 12ஆவது மாடிவரை, அடுத்த 4

மாடி கடைசிப்பையன் உண்மைக்கதை என்று சொல்லிக்கொண்டே 15 மாடி ஏறி 16ஆம் மாடி வாயிலுக்கு அருகே வந்துவிட்டார்கள். இனி பூட்டைத் திறக்கச் சாவி யாரிடம் இருக்கிறது என்று அம்மா கேட்டார்? காய்கனி பையுடன் கீழே இருக்கிறது என்று உண்மைக் கதையை முடித்தான் கடைசிப்பையன். ஐயோ! சாவியைக் கீழே வைத்துவிட்டு வந்து விட்டோமே. 16 மாடி இறங்கி கீழே போய் எடுத்து வரவேண்டுமே என்று அழாதகுறையாக வருந்தினார்கள்.

சரியை கிரியை யோக ஞானங்களைவிட ஜீவகாருண்யம் உயர்ந்தது. சரியை கிரியை முதலியனவை படி ஏறிச்செல்வது. ஜீவகாருண்யம் என்பது லிப்ட். வள்ளற்பெருமான் எல்லோருக்கும் லிப்ட் கொடுக்கிறார்.

**“ஜீவகாருண்ய ஒழுக்கமே மோட்சவீட்டின் திறவுகோல்”** என்கிறார்.

பசியை நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க புவனபோக சுதந்தரங்களைப் பெறுதற்குரிய அறிவிருந்தும் பூர்வகர்மத்தாலும் அஜாக்கிரதையாலும் அச்சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசிவருத்தத்தை நீக்கித் திருப்தியின்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய ஜீவகாருணியம் என்கின்ற திறவுக்கோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும்.

ஆகலில், ஜீவகாருண்ய மென்கின்ற மோட்ச வீட்டுத் திறவு கோலைக் காலமுள்ள போதே ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

திருச்சிற்றம்பலம்

## இல்லாமல் இருத்தல்

இருக்கின்றவற்றை மட்டுமே இருக்கின்றன என்று நாம் நம்புகிறோம். ஆனால் இல்லாதவையுங்கூட இருக்கின்றன என்பது நமக்குத் தெரிவதில்லை.

இந்திய அளவையியலில்(logic) அபாவம் என்றொரு கருதுகோள் பேசப்படும். அபாவம் என்பது இன்மை. இல்லாமல் இருத்தல். இல்லாதது எப்படி இருக்கும்? புதிராக இருக்கிறதல்லவா? இன்மைதான் மற்றவை இருப்பதற்கான இடத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது.

**ஈரல் ஒதுக்கி இடந் தந்த தாய்க்குக்**
**கூந்தல் ஒதுக்கிக் கொள்ளி வைக்க வந்த மகன்**

என்று பட்டினத்தாரைப் பற்றிப் பாடுவார்கள். பட்டினத்தார் வீடுவாசலைத் துறந்து சாமியாராகப் போய்விடுகிறார். அவருடைய

*தாயார் இறந்துபோகிறபோது தாய்க்குக் கொள்ளி வைப்பதற்காக மீண்டும் ஊருக்கு வருகிறார். ஒரு துளியாகத் தாயின் வயிற்றில் குடியேறியபோது, தாயின் வயிற்றில் இருந்த இடத்தை அவளுடைய ஈரல் அடைத்துக் கொண்டிருந்தது. பிள்ளை உருளவும் புரளவும் இடம் வேண்டுமே என்பதற்காக தன்னுடைய ஈரலை ஒதுக்கித் தன் வயிற்றில் இடம் தந்தாள் தாய். கைம்மாறாகக் கூந்தலை ஒதுக்கிக் கொள்ளி வைக்க வந்தான் மகன்.*

*எதுவும் இல்லாமலிருக்கும் இடத்தில்தான் ஏதாவது இருக்க முடிகிறது. பட்டினத்தார் இருக்கவேண்டுமென்றால் ஈரல் ஒதுக்கி இடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இடம் என்பது எதுவுமில்லாமல் இருப்பது. எதுவுமாக இல்லாமல் இருக்கிற இடம் இருப்பதானால்தான் அதில் ஏதாவது இருக்க முடிகிறது.*

*மட்பாண்டம் செய்கிறவர்கள் மண்ணை வனைந்து அழகழகான பானைகள் செய்கிறார்கள். வாங்குகிறவர்கள் காசு கொடுத்துப் பானைகள் வாங்குகிறார்கள். வாங்கப்படுவது எது? பானை வனையும் போது பச்சையாகவும் குழைவாகவும் இருந்து பின்னால் சுடப்பட்டுக் கெட்டிதட்டிவிட்ட மண்ணா? அல்லவே! பானையின் உள்ளே இருக்கும் காலி இடத்திற்காக அல்லவா வாங்குகிறார்கள்? அது காலி இடமாக இருந்தால்தானே அதனுள் நீரூற்ற முடியும்? இடமில்லாமல் நிரப்பப்பட்ட பானை என்பது வெறும் மண்கட்டியே அல்லவா? அதற்கு என்ன மதிப்பு? பானை எத்தனை இடங்கொண்டதாக இருக்கிறதோ அதற்குத் தகுந்த மதிப்பைப் பெறுகிறது; இல்லையா!*

*இப்போதெல்லாம் பானைகளை அழகுக்காகக்கூட வாங்கி வைக்கிறார்கள்! அழகுக்காக வாங்குகிற பானைகளை வைப்பதற்கும் இடம் வேண்டாமா?*

*வீடு கட்டிக் குடியேறுகிறவர்கள் எதில் குடியேறுகிறார்கள்? வீட்டிலா? அல்லவே! இடத்தில் அல்லவா? வீடென்று எதனைச் சொல்வோம்? சுவர்களையும் கதவையும் சன்னல்களையுமா? இவற்றினால் மறித்து உண்டாக்கப்பட்டிருக்கிற இடத்தையே அல்லவா? இடமில்லாத வீடு வீடே அல்லவே? அது பூசி முடிக்கப்பட்ட கல்லறை அல்லவா? அதில் உயிரோட்டத்திற்கு இடமுண்டா? இடமில்லாத இடத்தில் எதுவும் இருக்க முடியாது. நிரம்பியிருக்கிற எதுவும் எதையும் தன்னிடத்தில் தக்கவைத்துக் கொள்ள முடியாது.*

*மெய்யறிவு தனக்கு இடம் கோருகிறது; அன்பு தனக்கு இடம் கோருகிறது; அருள் தனக்கு இடம் கோருகிறது; எல்லா உயர்ந்த உணர்ச்சிகளும் தங்களுக்கு இடம் கோருகின்றன. அவற்றுக்கு இடம் கொடுக்க இடத்தைக் காலி செய்யுங்கள்! நம்முள்ளே இருக்கிற கீழான, தேவையற்ற உணர்வுகளை நீக்கி இடம் கொடுங்கள்! பின்பு மெய் ஞானம் பிறக்கும்.*

# மூத்தோர்சொல் அமிர்தம்

புகழுக்கு மயங்காதவர்கள் இவ்வுலகில் யார்தான் இருக்கிறார்கள் என்று ஒருவர் மற்றொருவரைப் பார்த்து கேட்டார்.

அய்யா இந்த உலகில் புகழுக்கு மயங்காதவர் நீங்கள் ஒருவர்தான் என்று கூறினார்.

இதனை கேட்டதும் எதிரில் இருந்தவர் மிக்க நன்றி என்று கூறி பெருமிதம் அடைந்தார். இதிலிருந்து எதிரில் இருந்தவரும் புகழில் மயங்கிவிட்டார் என்பது புரிகிறது.

இரண்டு நபர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த இருவரில் ஒருவரிடம் பணம் அதிகமாக இருந்தது. மற்றொருவரிடம் அறிவு அதிகமாக இருந்தது. இவ்விரண்டும் ஒரே இடத்தில் இருப்பதுதான் அபூர்வம்.

**திருவேறு தெள்ளிய ராதல் வேறு**
**இருவேறு உலகத்து இயற்கை – குறள்**

பணம் உள்ளவருக்கோ யாராவது நம்மை புகழ மாட்டார்களா? என்று ஒரு ஆசை இருந்தது. பக்கத்தில் இருக்கின்ற அறிவாளியோ மிகவும் ஏழ்மையில் இருந்தார். இந்த பணக்காரரர் பணம் கொடுத்தாவது அந்த அறிவாளி நம்மை புகழவேண்டும் என்று நினைத்தார்.

அதன்படி பணக்காரரர், 'இதோ பார் என்னிடம் ஆயிரம் பொற்காசுகள் இருக்கின்றன. அதில் நூறு பொற்காசுகளை நான் உன்னிடம் கொடுக்கின்றேன். நீ என்னைப்பற்றி புகழ்ந்து பேச வேண்டும்' என்று கூறினார்.

அதற்கு ஏழ்மையில் இருப்பவர் 'இது நேர்மையான பங்கீடு இல்லை. நீங்கள் பங்கு போடுவதில் நேர்மை இல்லாததினால் நான் உங்களைப்பற்றி புகழ்ந்து பேச மாட்டேன்' என்று கூறினார்.

'அப்படியென்றால் என்னிடம் உள்ள ஆயிரம் பொற்காசுகளில் பாதியை உனக்குக் கொடுத்து விடுகிறேன், என்னைப் புகழ்ந்து பேசுவாயா?' என்று கேட்டார். அதற்கு அறிவில் சிறந்தவர் கூறினார். என்னிடம் 500 பொற்காசுகள், உங்களிடம் 500 பொற்காசுகள் இருக்கின்றன என்றால் நாம் இருவரும் சம அந்தஸ்தில் இருக்கிறோம். எனக்கு சமமாக இருக்கிற உங்களை நான் எப்படி புகழ்ந்து பேச முடியும்? என்றார்.

"அப்படியானால் என்னிடம் உள்ள செல்வம் அனைத்தையும்

உன்னிடம் கொடுக்கின்றேன் அப்பொழுதாவது நீ என்னை புகழ்ந்து பேசுவாயா என்று கேட்டார்.

'நீங்கள் உங்களிடம் உள்ள செல்வம் முழுவதும் என்னிடம் கொடுத்தால் நான் செல்வந்தன் ஆகிவிடுவேன். நீங்கள் ஏழையாகி விடுவீர்கள். செல்வந்தனான நான் ஒன்றுமே இல்லாத ஏழையாகிய உங்களை எப்படி புகழ்ந்து பேச முடியும் என்றார் அதுவும் சரிதானே ஒன்றுமில்லாதவனை புகழ்ந்து என்னவாகப் போகிறது.' (என்ன கிடைக்கப்போகிறது) இப்போதுதான் அந்தப் பெரியவர் யோசித்தார்.

நாம் என்ன செய்தாலும் இந்த ஏழையிடமிருந்து புகழ் மொழிகளை பெற முடியாது என்று புரிந்து கொண்டார்.

புகழ்மொழிகளை விலை கொடுத்து வாங்கிவிட முடியாது.

அப்படி வாங்கவேண்டும் என்று நினைத்தால் அதனால் எந்தவித பிரயோஜனமும் இல்லை. புகழ் என்பது தானாக வந்துசேர வேண்டும். அதற்கேற்றபடி நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். இதுதான் முறை.

இதைவிடுத்து பணம் கொடுத்து புகழ வைப்பது, போஸ்டர் அடித்து சுவற்றில் ஒட்டுவதோ எத்தனை நாளைக்கு நிலைக்கும்?

ஒருவன் சுவற்றில் போஸ்டரை ஒட்டிக் கொண்டிருந்தான். அருகில் போய் அந்த போஸ்டரில் என்ன எழுதியுள்ளது என்று பார்த்தேன். 'பிறந்தநாள் காணும் பெரியவரே' நீங்கள் 'வாழ்க பல்லாண்டு' என்று எழுதி இருந்தது.

அய்யா, நீங்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்க வேண்டுமென்றால் அவரை நேரில் பார்த்து தெரிவிக்க வேண்டியதுதானே? உங்கள் வாழ்த்துக்களை ஏன் இப்படி பசை தடவி ஒட்டுகிறீர்கள். நீங்கள் இப்படி போஸ்டர் ஒட்டுவது அந்தப் பெரியவருக்கு தெரியுமா? தெரியும் என்றார்.

எப்படி தெரியும் என்கிறீர்கள்?

அதற்கு அவர் கூறினார், அந்தப் பெரியவரே நான்தான் என்று.

**உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று**
**ஈவார்மேல் நிற்கும் புகழ். – புகழ் 232**

புகழ்ந்து சொல்கின்றவர் சொல்பவை எல்லாம் வறுமையால் இரப்பவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவுகின்றவரின் மேல் நிற்கின்ற புகழேயாகும்.

அக்காலத்தில் வசிஷ்டர் என்றொரு முனிவர் இருந்தார். அவர் மற்றவர்களைப் போல் சாதாரண முனிவர் இல்லை. பிரம்ம ரிஷி ஒருவருக்கு பிரம்ம ஞானம் வந்துவிட்டால் அதன்பின் அவரை பிரம்ம ரிஷி என்றுதான் கூறுவார்கள்.

அந்த ஞானம் அவ்வளவு சுலபமாக எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை. அதை அடைவதற்கு விசுவாமித்திரர் என்னபாடு பட்டிருக்கின்றார் தெரியுமா? நானும் பிரம்ம ஞானத்தை பெறவேண்டும் என்னை அனைவரும் பிரம்ம ரிஷி என்று மதிக்க வேண்டும். இப்படியொரு ஆசை விசுவாமித்திரருக்கு.

சரி அதற்கு என்ன வழியென்று யோசித்து நேராக காட்டுக்குப் போனார். கடுமையான தவத்தில் இருந்த அவர் ஒருநாள் தான் பிரம்மஞானம் அடைந்து விட்டதாக நினைத்தார்.

உடனே அவர் வசிஷ்டாரிடம் சென்று அவரை வணங்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

எப்படியென்றால் அந்தக் காலத்தில் ஒருவரைஒருவர் வணங்குவதில் சில சம்பிரதாயங்கள் உண்டு. ஒரு பிரம்ம ரிஷி மற்றொருவரை வணங்குகிறார் என்றால் எதிரே இருப்பவர் பிரம்மரிஷியாக இருந்தால் மட்டுமே வணங்குவார்.

ஆசீர்வாதம் செய்வார் அவ்வளவுதான். இதனை கருத்தில் கொண்டுதான் விசிவாமித்திரர் வசிஷ்டாரிடம் சென்றார்.

வசிஷ்டர் ஆசிரமத்திற்கு வந்த அவரை வணங்கினார் விசுவாமித்திரர். ஆனால் வசிஷ்டர் விசுவாமித்திரரை வணங்காமல் கைகளை தூக்கி ஆசீர்வாதம் செய்தார். இத்தனை நாள் தவம் செய்த நம்மை பிரம்ம ரிஷியென்று இவர் ஏற்றுக்கொள்ளவில்லையே என்று விசுவாமித்திரருக்கு கடுமையான கோபம் வந்தது.

மீண்டும் தவம் செய்ய ஆரம்பித்தார். ஒருநாள் அவருடைய இஷ்ட தெய்வம் அவருக்கு காட்சி கொடுத்து, "விசுவாமித்திரா நீ சென்று வசிஷ்டரை வணங்கு. அவர் பதிலுக்கு உன்னை வணங்கவில்லை என்றால் அவர் தலை சுக்கு நூறாக வெடித்துவிடும் என்று சாபம் கொடு" என்று கூறி மறைந்தது.

விசுவாமித்திரர் வசிஷ்டாரிடம் சென்று அவரை வணங்கினார். வசிஷ்டரோ கைகளை தூக்கி ஆசிர்வாதம் செய்தார். விசுவாமித்திரர் கோபத்தின் உச்சத்திற்கே சென்று விட்டார்.

*"இவ்வளவு தவம் செய்த என்னை பிரம்ம ரிஷி என்று அங்கிகரிக்காத உங்களையும் உங்களைச் சேர்ந்தவர்களையும் நான் என்ன செய்கிறேன் பார்" என்று பொங்கி எழுந்தார்.*

*ஆனால் அந்த நேரத்தில் அவரிடம் ஒரு மாற்றம். இவ்வளவு காலம் அவர் செய்த தவத்தின் விளைவாக அவருக்கு ஒரு எண்ணம் உண்டாகியது. இவர் நம்மை பிரம்மஞானியாக ஏற்கவில்லை என்றால் நமக்கென்ன? அதற்காக நான் ஏன் இப்படி கோபம் கொள்ள வேண்டும்? கோபத்தால் புத்தி தடுமாறி சாபம் கொடுக்க இருந்தேனே!*

*கோபம், பொறாமை மற்றவர்களுக்கு தீங்கு செய்வது போன்ற எண்ணமெல்லாம் சாதாரண மனிதனுக்கு வரலாம். இவ்வளவு காலம் தவம் செய்த நமக்கு வரலாமா. இந்த கெட்ட எண்ணம் என் மனதில் இன்னும் இருக்கின்றதே. அப்படிப்பட்ட எனக்கு பிரம்ம ஞானம் வந்துவிட்டது என்று எப்படி சொல்ல முடியும் என்று நினைத்தார்.*

*உண்மையான தவம் என்றால் என்ன? மற்றவர்களுக்கு கெடுதல் செய்கிற எண்ணமே இல்லாமல் இருப்பது தானே. நான் எவ்வளவு மோசமாக எண்ணிவிட்டேன். தன்னிடம் உள்ள ஆன்மாதானே எல்லா உயிர்களிடமும் இருக்கின்றன என்ற உணர்வு ஏற்படவே வெட்கத்துடன் தலை குனிந்தபடி திரும்பி நடக்க ஆரம்பித்தார் விசுவாமித்திரர்.*

*'கொஞ்சம் நில்லுங்கள் முனிவரே' என்று ஒரு சத்தம் கேட்டது. திரும்பிய விசுவாமித்திரரை வணங்கினார் வசிஷ்டர். "உங்களுக்கு பிரம்மஞானம் வந்துவிட்டது. நீங்கள் பிரம்மரிஷி" என்றார் வசிஷ்டர்.*

**தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயி ரெல்லாந் தொழும்.– தவம் 268**

*தவ வலிமையால் தன்னுடைய உயிர், தான் என்னும் பற்று நீங்கப் பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் (அவனுடைய பெருமையை உணர்ந்து) தொழும்.*

**ஜீவகாருண்ய ஒழுக்கம் உடையவர்களாகி ஜீவர்களைப் பசியென்கிற அபாயத்திலிருந்து நீங்கச் செய்கின்ற உத்தமர்கள் எந்த ஜாதியாராயினும், எந்தச் சமயத்தாராயினும், எந்தச் செய்கையை உடையவர்களாயினும் தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையர் ஆவார்களென்று சர்வ சத்தியையுடைய கடவுள் சாட்சியாக சத்தியம் செய்யப்படுமென்று அறிய வேண்டும். – உரைநடைப் பகுதி**

# தன்னை அறிதல்

*பதியை (கடவுளை) அறியவேண்டும்.*

*பசுவை (ஆன்மாவை; தன்னை) அறிய வேண்டும்.*

*பாசத்தை (தளையை; கட்டை; ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களை) அறியவேண்டும்; அறிந்து, பாசத்தை நீத்து, பசு பதியாக ஆக வேண்டும்.*

*தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம் என்றொரு பழமொழியே ஏற்பட்டுவிட்டது. திருமூலரிலிருந்து எழுந்த பழமொழிதான் இது. தன்னை அறிதல் முதற்படி. தலைவனை அறிதல் அடுத்தபடி.*

**என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்**
**என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்**
**என்னை அறிந்திட்டிருத்தலும் கைவிடா(து)**
**என்னை இட்டென்னை உசாவுகின்றானே. – 2355**

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தான்இருந்தானே. – 2366**

*என்பது திருமந்திரம். இத்திருமந்திரங்களுக்கெல்லாம் உரை கூற வேண்டியதில்லை. உரை வேண்டாது தானே விளங்கும் எளிமையும் அருமையும் நிறைந்தவை இம்மந்திரங்கள்.*

*தன்னைத்தான் யாரென்று, இன்னாரென்று, முதலில் அறியவேண்டும். நம்மை நாம் யாரென்று அறியவேண்டும். நான் யார்? என்றே ஒரு நூல் செய்தார் ரமணர். தன்னை அறிவதே அறிவு. பின்னை அறிவெல்லாம் பேயறிவு என்கிறார் திருமூலர்.*

**முன்னை அறிவினிற் செய்த முதுதவம்**
**பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்**
**தன்னை அறிவது அறிவாம் அஃதன்றிப்**
**பின்னை அறிவது பேயறி வாகுமே. – 2318**

*தன்னை அறிவது எப்படி? நாம் யார்? உடம்பா? கருவி கரணங்களா? உயிரா? முதலில் அறிய வேண்டியது, நாம் இந்த உடம்பல்ல என்பது.*

**"தன்னை அறியாது உடலை முன் தானென்றான்" (2264)**

**"உன்னை அறியாது உடலை முன் நானென்றாய்" (2279)**

*என்பன திருமந்திர வரிகள்.*

*உடல் நாமன்று, கை கால்கள் முகம் கண் காது முதலிய உறுப்புகளும் நாமன்று. மனம் முதலிய உள்ளுறுப்புகளும் (கரணங்களும்) நாமன்று. நாம் என்பது உயிர்; ஆன்மா. ஆன்மாவை (உயிரை) அறிந்தால் உயிர்க்குயிரான இறைவனை அறியலாம். தன்னை அறிதலாவது, தான் ஆன்மா என்று அறிதல். தன் ஆன்மாவின் உண்மை நிலையை அறிதல்.*

*உங்களை நீங்கள் அறிவீர்களா? உங்களை உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டால், என்னை எனக்குத் தெரியாது! என்னை நான் அறியேன்! என்று எத்தனை பேர் கூறுவார்கள். என்னை எனக்குத் தெரியாதா? தன்னைத்தான் அறியாத மாந்தர் தரணியில் ஒருவர் உண்டோ? என்னை அசடனாக எண்ணியோ கேட்டீர்? என்றுதானே கூறுவார்கள். இப்படித்தான் சொன்னான் அந்தக் காலத்து சீடன் ஒருவன். அவனுக்குக் குரு உபதேசிக்கிறார்.*

*கைவல்லிய நவநீதம் என்றொரு அருமையான வேதாந்தத் தமிழ் நூல். தாண்டவராய சுவாமிகள் செய்தது. அதில் குருசீட உரையாடலாகத் தன்னையறிதலைக் கூறும் செய்யுள்கள் இனிமையானவை; எளிதில் பொருள் விளங்குபவை. குரு உபதேசிக்கிறார்:*

**தன்னையும் தனக்கா தாரத் தலைவனை யும்கண் டானேல்**
**பின்னை அத் தலைவன் தானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்**
**உன்னைநீ அறிந்தாய் ஆகில் உனக்கொரு கேடும் இல்லை**
**என்னைநீ கேட்கை யாலே ஈதுப தேசித் தேனே. – 13**

*சீடன் கேட்கிறான்:*

**என்னைத்தான் சடனா உள்ளத் தெண்ணியோ சொன்னீர் ஐயா**
**தன்னைத்தான் அறியா மாந்தர் தரணியில் ஒருவர் உண்டோ**
**பின்னைத்தான் அவர்கள் எல்லாம் பிறந்திறந் துழலு வான்ஏன்**
**நின்னைத்தான் நம்பி னேற்கு நிண்ணயம் அருளு வீரே. – 14**

*குரு மீண்டும் அருளுகிறார்:*

**இன்னது தேகம், தேகி இவன், என உணர்வான் யாவன்**
**அன்னவன் தன்னைத் தான்என் றறிந்தவன் ஆகும் என்றார்**
**சொன்னபின் தேகி யார்இத் தூலம்அல் லாமல் என்றான்**
**பின்னது கேட்ட ஐயர் பீழையும் நகையும் கொண்டார். – 15**

"தேகம் இன்னது, தேகி இவன்" என உணர்பவன் தன்னைத் தான் அறிந்தவன் என்பது தாண்டவராயர் உபதேசம். தேகம் வேறு தேகி வேறு; உடம்பு வேறு, உடம்பை உடையவன் வேறு என்று அறிய வேண்டும். என் உடம்பு என்பதனாலேயே உடம்பு வேறு, உடம்பை உடைய நாம் வேறு என்பது பெறப்படுகிறதன்றோ. என் கை, என் கால், என் கண் என்று கூறுவதால் உடம்பு நாமன்று என்றறியலாம். நம்மை நாம் அறியவொட்டாது நம் கருவி கரணங்கள் நம்மை மறைத்துக் கொண்டுள்ளன. இந்த மறைப்பை நீக்கிக் கண்டால் நம்மை நாம் ஆன்மா என்று அறியலாம். திருமூலர் இதனை ஓர் அருமையான பாடலால் உதாரணத்தால் கூறுகிறார்.

**பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்**
**பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்**
**தன்னை மறைத்தது தன் கர ணங்களாம்**
**தன்னின் மறைந்தது தன் கரணங்களே. – 2289**

*அணி – ஆபரணம்; நகை*

*பூடணம் – பூஷணம்.*

பொன் நகை ஒன்றை நகை என்ற எண்ணத்தோடு பார்க்கும் போது பொன் என்பது தோன்றாது. பொன் என்ற எண்ணத்தோடு பார்க்கும் போது நகை தோன்றாது ஒரு பெண் காண்பதிலும் பொற்கொல்லன் ஒருவர் காண்பதிலும் இருவேறுபாடுண்டு. தங்க நகையைத் தட்டார் பார்க்கும்போது முதலில் அதன் மாற்று எடை முதலியனவே அவர் கண்களுக்குப் படுகின்றன. அழகு முதலியவை அப்புறம் தான். அதே தங்க நகையைப் பெண்ணொருத்தி பார்க்கும் போது அவளுக்கு நகையே முதலில் தெரிகிறது. தங்கத்தின் தரமெல்லாம் அப்புறம்தான்.

இதைப்போல ஆன்மா தன் கருவி கரணங்களே என்று எண்ணினால் ஆன்ம தரிசனம் இல்லை. ஆன்மா வேறு தேகம் வேறு என்று நோக்கும் போது கருவி கரணங்கள் மறையும். தேகமே தான் என்ற எண்ணத்தோடு பார்த்தால் நமக்கு ஆன்மா தெரிவதில்லை. கருவி கரணங்கள் ஆன்மாவை மறைக்கின்றன. கருவி கரணங்கள் நாமல்ல, நாம் அவற்றின் வேறாகிய ஆன்மா என்ற எண்ணத்தோடு பார்க்கும் போது ஆன்மா தெரிகிறது. கருவி கரணங்கள் மறைந்து விடுகின்றன. "தன்னை அறியாது உடலை முன் தானென்றான்" என்ற திருமந்திரமும் இதைத்தான் கூறுகிறது.

**மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தின் மறைந்தது மாமத யானை**

**பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்**
**பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. - 2290**

என்றொரு மந்திரம் உண்டு. பொன்னை மறைத்தது என்னும் மந்திரத்திற்கு அடுத்த மந்திரம் இது. இது பர தரிசனத்தை உணர்த்துகிறது. தன்னை யறிதலைப் பற்றிய மந்திரங்கள் ஆன்ம தரிசனத்தை உணர்த்துகின்றன.


நமது வள்ளல் பெருமானும் இதனையே திருஅருட்பாவில்

**தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு**
**தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே**


என இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார். மேலும் உரைநடைப் பகுதியில் "இந்த தூலதேகத்தில் ஜீவனாக இருக்கின்ற ஆன்மாவும், அறிவுக்கறிவாய்இருக்கின்ற கடவுள் இயற்கை விளக்கமும் தவிர கரணம் (மனம் முதலானவை), இந்திரியம் (கண் முதலானவை) முதலில் மற்றவைகளெல்லாம் கருவிகளாகிய தத்துவச் சடங்களே அல்லது சித்துக்களல்ல" என்றும் "இந்த தேகத்தில் நாம் யாரெனில் ஆன்மா சிற்றணு வடிவினன்" என்றும் அருளியிள்ளார்.

இதனின்று கேடில்லாத (துன்பமில்லாத) வாழ்வை வாழ விரும்பும் ஒவ்வொருவரும் "தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறிய வேண்டும்" என்பது உறுதியாகிறது.

திருச்சிற்றம்பலம்



## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்



அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

Wings of Wisdom

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Books at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# ஆவுடையார் கோயில் - சத்திய ஞானசபை

## ஒரு கண்ணோட்டம்

தவத்திரு ஊரன் அடிகள்

### திருப்பெருந்துறை – ஆவுடையார் கோயில்

திருப்பெருந்துறை தேவார வைப்புத் தலம். திருவாசகத் தலம். பாண்டி நாட்டில், மிழலைக் கூற்றத்தில், வெள்ளாற்றங் கரையில், இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கிக்கு அண்மையில் உள்ளது. குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் திருவாதவூரரை இறைவன் குருந்த மரத்தடியில் குருவாக வந்து ஆட்கொண்டருளிய தலம். அமைச்சர் வாதவூரர், அடியார் மாணிக்கவாசகராக மாறிய தலம். மாணிக்கவாசகர் கட்டிய கோயில். திருவாசகப் பதிகங்கள் ஐம்பத்தொன்றில் இருபது பதிகங்கள் பாடப்பெற்ற இடம்.

ஊர் பெருந்துறை (திருப்பெருந்துறை), கோயில் ஆவுடையார் கோயில். கோயிற்பெயரே இன்று ஊர்ப்பெயராக விளங்குகிறது. திருப்பெருந்துறை என்பதைவிட ஆவுடையார்கோயில் என்பதே இன்று பெருவழக்காக உள்ளது.

திருப்பெருந்துறைக் கோயிலில் லிங்கம் இல்லை. ஆவுடையார் (பீடம்) மட்டுமே உண்டு. அதனால் ஆவுடையார் கோயில் எனப் பெயர் பெற்றது. இறைவனும், இறைவியும் இங்கு உருவமின்றி அருவ வடிவிலேயே எழுந்தருளியுள்ளனர். ஆவுடையார் கோயிலில் அமைப்பு ஏனைய கோயில்களின் அமைப்பினின்றும் பெரிதும் மாறுபட்டது. வழிபாட்டு முறைகளும் வேறுபட்டவை. இக்கோயிலில் கொடிமரம் இல்லை, பலிபீடம் இல்லை, நந்தி இல்லை. விநாயகர், முருகர், நடராசர் மட்டும் உண்டு. ஏனைய பரிவார மூர்த்தங்கள் இல்லை. இக்கோயில் முழுவதும் தத்துவ அமைப்பு.

இக்கோயிலில் ஆறு சபைகள் உண்டு.

1. ஆனந்த சபை – இது கர்ப்பக்கிருகம் (கருவறை)
2. சித்சபை – அர்த்த மண்டபம்
3. சத்சபை – நிவேதன மண்டபம், அமுது மண்டபம்
4. தேவசபை – யாவரும் நின்று தரிசனம் செய்யும் இடம்
5. நிருத்தசபை – இரண்டாம் திருச்சுற்று சந்நிதி மண்டபம்
6. கனகசபை – மூன்றாம் திருச்சுற்று சந்நிதி மண்டபம்

*சந்நிதியில் நின்று தரிசிக்கும் நம் நிழல் கருவறையில் உள்ள ஆவுடையாரின் மீது (பீடத்தின் மீது) விழும். கோயிலின் வெளிவாயிலில் நின்றாலே, வாயிலின் வழியாகச் சென்றாலே, நம் நிழல் கருவறையில் விழுவதைக் காணலாம்.*

*ஏனைய கோயில்களிலெல்லாம் பச்சரிசிச்சோறே படைப்பு. இங்கு புழுங்கலரிசிச் சோறு படைப்பு. அதுவும் சோறு படைப்பன்று. சோற்று ஆவிதான் படைப்பு. அர்த்த மண்டபத்திற்கு வெளியே உள்ள அமுது மண்டபம் எனும் நிவேதன மண்டபத்தில், சந்நிதிக்கு எதிரே உள்ளே நீண்ட சதுரப் படைகல்லில் சோறு பரவலாகக் கொட்டப்பெறும். பானைகளிலிருந்தே கைபடாமல் சூடாகக் கொட்டப்பெறும். சோற்றிலிருந்து அதிக அளவில் ஆவி எழும். மண்டபம் முழுவதுமே புகையமாகக் காணப்பெறும்.* ***அச்சோற்றாவியே ஆத்ம நாதருக்கு நைவேத்தியம்.*** *அரைக்கீரைச் சுண்டலும் பாகற்காய்ப் புளியங்கறியும் நைவேத்தியம். இத்தகைய நைவேத்தியங்கள் வேறு எக்கோயிலிலும் இல்லை. இவை இத்தலத்திற்கே உரிய தனிச்சிறப்பு.*

*இங்கு எல்லாமே தத்துவமயம், ஞானமயம்.*

*கலாதீபங்கள் 5*

*மந்திரதீபங்கள் 11*

*புவன தீபங்கள் 204*

*வர்ணதீபங்கள் 51*

*பததீபங்கள் 81*

*தத்துவதீபங்கள் 36*

*நட்சத்திர தீபங்கள் 27*

*சூரிய சந்திர அக்கினி தீபங்கள் 3*

*என்று கோயிலெங்கும் ஆங்காங்கே தீப மயமாக இருக்கும்.*

*சுவாமி ஆத்மநாதரை தரிசிக்க நேர்வாயில் வழியாகப் புகுவதில்லை. பக்கங்களில் உள்ள வாயில்களின் வழியாகவே செல்வதும் திரும்புவதும் மரபு. அம்பிகை சிவயோக நாயகியைத் தரிசிப்பதும் கற்பலகணி வாயிலாகவே.*

*மேளம் முதலிய வாத்தியங்கள் வாசிப்பது வழக்கமில்லை. சின்னம், சங்கு ,மணி ஓசைகளே இங்கு முழங்கப்படும்.*

*வாகன ஏற்றம், தேர்த் திருவிழா எல்லாம் மணிவாசகருக்கே.*

*பூசை செய்பவர்கள் தில்லைவாழந்தணர்களைப் போல ஒரு தனிக்*

கூட்டத்தார். தில்லையில் தீட்சிதர்கள். திருப்பெருந்துறையில் நம்பியார்கள். தில்லையில் மூவாயிரவர். அவருள் ஒருவர் நடராசர். திருப்பெருந்துறையில் முந்நூற்றுவர். அவருள் ஒருவர் ஆன்மநாதர்.

சிற்பவேலைப்பாடுகள், ஓவியங்கள் மிகவும் சிறப்பு. இக்காலத்துக் கட்டிட வேலைகளில் கான்கிரீட்டுக்கு உபயோகிக்கும் முற்றுக்கம்பி, திரணைக்கம்பிகளோடு, நான்கு பட்டைக் கம்பி, ஆறுபட்டைக் கம்பி போன்றவற்றை இங்குள்ள கல்வேலைப்பாடுகளிற் காணலாம்.

ஆவுடையார்கோயில் மண்டபத்தின் கொடுங்கை வேலைப்பாடு மிகுந்தது. மிகவும் மெல்லியது, பாறாங்கல்லைப் பலகைக்கல்லாகச் செதுக்கி வேலை செய்திருக்கிறார்கள். மரவேலைப்பாட்டின் அளவுக்குக் கல்வேலைப் பாட்டைச் செய்திருக்கிறார்கள். மெல்லிய கொடுங்கையின் கனஅளவைக் கூறக்கேட்டு வியந்த வெள்ளைக்கார அதிகாரிகள் அதன் உண்மையைக் கண்டறிவதற்காகத் துப்பாக்கியால் சுட்டுப் பார்த்தார்களாம். துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த இடமென்று கொடுங்கையிலுள்ள இரு துளைகளை இன்றும் காட்டுகிறார்கள். துளையிட்ட அவ்விடங்கள் கொடுங்கையின் மென்மையைக் காட்டுகின்றன. சிற்பிகளேகூட மாதிரிக்காகத் துளையிட்டிருக்கலாம். சிற்பிகள் வேலைஒப்பந்தம் செய்துகொள்ளுங் காலங்களில் ஆவுடையார்கோயில் கொடுங்கை, திருவீழிமிழலை வௌவால் நத்து(வாவல் வெற்றி) மண்டபம், கடாரங்கொண்டான் மதில் இவைகளைத் தவிர மற்றப் பணிகளைப் போலச் செய்து கொடுப்போம் என்று ஒப்பந்தஞ் செய்துகொள்வார்களாம். இவ்வேலைப் பாடுகள் அவ்வளவு அரியவை.

கட்டிடம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளுக்குத் திருப்பெருந்துறை ஒரு சுரங்கம். தத்துவங்களுக்கும் ஞானத்துக்கும் களஞ்சியம் என்பது முன்கூறிய செய்திகளால் விளங்கும்.

**சுருங்கக்கூறின் இது சரியை, கிரியையாளர்களுக்கு உரிய தலமன்று. யோகிகளுக்கும் ஞானிகளுக்கும் உரிய தலம்.**

பிற்காலத்தில் வடலூரில் வள்ளலார் அமைத்த சத்தியஞான சபைக்கு இது ஒரு வகையில் முன்னோடி எனலாம்.

**வடலூர் சத்தியஞானசபை**

வடலூர் சத்திய ஞான சபையின் அமைப்பே ஒரு தனிவகை அமைப்பு. எண்கோண வடிவம். தெற்கு நோக்கிய சந்நிதி. செப்புக் கூரை. பொற்கலசம்.

மூர்த்தி எதுவும் இல்லை. வள்ளற் பெருமானது திருக்கரத்தால் ஏற்றி வைத்தருளப் பெற்ற ஜோதி மட்டுமே உண்டு. இன்றும்

அணையா ஜோதியாக வழிபாட்டிலுள்ளது. அபிஷேகம் இல்லை. அர்ச்சனை இல்லை. தேங்காய் உடைப்பதில்லை. திருகலாகச் செய்து படைப்பதுண்டு. வேறு நைவேத்தியம் எதுவும் இல்லை. வாத்தியம் இல்லை. வாகனம் இல்லை. தேர் இல்லை. தெப்பம் இல்லை.

முழுவதும் தத்துவத் தலம். சரியை, கிரியைத் தலமன்று, யோகத் தலமுமன்று, ஞானத் தலம். ஞான பூசை, ஞான வழிபாடு.

இப்படி ஒரு வழிபாடு இன்றும் வடலூரில் நடந்து கொண்டிருக்கிறது.

ஆவுடையார் கோயிலுக்கும் சத்திய ஞான சபைக்கும் சிலபல ஒப்புமைகள் உண்டு.

இரண்டும் தெற்கு நோக்கியவை. தெற்கு ஞானத்தில் சிறந்தது என்பது வள்ளலார் உபதேசம். சைவத்தின் முதன்மையான தலம் சிதம்பரம் தெற்கு நோக்கியது. வைணவத்தில் முதன்மையான ஸ்ரீரங்கம் தெற்கு நோக்கியது. ஆவுடையார் கோயில் தெற்கு நோக்கியது. சத்தியஞானசபையும் தெற்கு நோக்கியது.

ஆவுடையார் கோயில், சத்திய ஞானசபை ஆகிய இரண்டுமே அமைப்பிலும், வழிபாடு முதலிய நடை முறைகளிலும் ஏனைய எல்லாக் கோயில்களினின்றும் வேறுபட்டவை. இக்காலத்திய எழுத்தாளர்களின் மொழியிற் கூறினால் வித்தியாசமானவை.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய தேவார மூவரும் கோயில் கட்டியதாக வரலாறு இல்லை. மாணிக்கவாசகர் கோயில் கட்டினார். தாச, சற்புத்திர, சகமார்க்கங்களை விளக்க வந்தவர்கள் ஏற்கனவே இருந்த கோயில்களுக்குச் சென்று வழிபட்டனர்.

சன்மார்க்கத்தை விளக்க வந்த மாணிக்கவாசகர், பழங்கோயில்கள் சிலவற்றை வழிபட்டதோடு, புதிதாகத் தாமே ஒரு தத்துவக் கோயிலைக் கட்டினார்.

சமய சன்மார்க்கத்தை விளக்க வந்தவரே கோயில் கட்டினார் என்றால், சமரச சுத்த சன்மார்க்கத்தை விளக்க வந்தவர், அதற்கேற்ப ஒரு புதுக்கோயிலைக் கட்ட வேண்டாவோ? கோயில் என்று பேரிடாது சபை என்றே பேரிட்டு வள்ளலார் சத்திய ஞான சபையைக் கட்டினார்.

திருப்பெருந்துறை ஆவுடையார்கோயில் சைவ சன்மார்க்கத் தலம். வடலூரில் சத்திய ஞானசபை சமரச சுத்த சன்மார்க்க தலம்.

வடலூர் சத்திய ஞானசபைக்குத் திருப்பெருந்துறை ஆவுடையார் கோயில் முன்னோடி.

திருச்சிற்றம்பலம்

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**சமயம் கடந்த தனிப்பொருள் வெளியாய் 61**
**அமையும் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி 62**

இங்கே சமயம் என்பது, சைவம் முதலான அனைத்துச் சமயங்களையும் குறிப்பது.

சமயங்கடந்த நிலை என்ற ஒரு நிலை, சமய அதீதம் – சமயாதீதம், சைவ சமயத்தில் மட்டுமே பேசப்பெறுகிறது. ஏனைய சமயங்கள் சமயங் கடந்த நிலையை, சமய அதீதத்தைப் பேசுவதில்லை. தம் தம் சமயமே சமயம் என்று சாதிக்கின்றன. சமயங்கடந்த நிலை (சமயாதீதம்) சைவம் ஒன்றற்கே உரிய தனிச்சிறப்பு.

“சைவம் முதலான மதங்களாகி மதாதீதம் ஆன அருள் மரபு வாழி” என்று சமயாதீதம் பேசுகிறார் தாயுமானவர். “சைவத்தின் சமரசம்” என்றே திரு.வி.க. ஒரு நூல் எழுதினார். வேறு சமயங்களின் பெயரில் இவ்வாறு நூல்கள் எழுத இயலுமா? அவற்றிலெல்லாம் சமரசம் இல்லை, அதீதம் இல்லை. சைவம் மட்டுமே சமரசமும், அதீதமும் பேசுகிறது. ஏனைய எல்லாச் சமயங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு தான் அதீதமாகத் திகழ்வது சைவம்.

சைவமே சமரசம் பேசுகிறது என்றால், சமயாதீதம் பேசுகிறது என்றால், நம் வள்ளல் பெருமான் சமரசத்திற்கும், சமயாதீதத்திற்கும் என்று வந்தவர்தானே, வருவிக்கப்பெற்றவர்தானே.

வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கம் சமயாதீதம். அதன் பொருள் சமயங்கடந்த தனிப்பொருள். சமயங்கடந்த தனிப்பொருள் வெளியே திருச்சபை. இதுகாறும் சிற்சபை என்றே கூறிவந்தவர் இங்கே திருச்சபை என்றருளினார். சிற்சபை சைவத்தில் வழங்கும் பெயர். அதையே திருச்சபை என்றால் பொதுவாகி விடுகிறது. சபை என்றாலே பொதுதான். பொது என்றே சபைக்கு ஒரு பெயர்.

சிற்சபை பொற்சபைகளைச் “சிற்பொதுவும் பொற்பொதுவும் நான் அறியலாச்சு”(5259) என்றும் வள்ளற்பெருமான் பாடுவார்.

சமயங்கள் கூறும் முடிபுகளைக் கடந்ததாய், சமயப் பொதுமை பொதுளியதாய் அமையும் தனிப் பொருள்வெளியே திருச்சபை (ஞானசபை), அச்சபையில் எழுந்தருளி அருள் பாலிக்கும் அருட்பெருஞ்ஜோதியே என்று போற்றுகின்றார்.

வடலூரில் வள்ளற்பெருமான் அமைத்தருளிய சத்திய ஞானசபை சமயங்கடந்த தனிப்பொருள்வெளியாய் அமைந்த திருச்சபை.

**வேத ஆகமங்களின் விளைவுகட்கு எல்லாம்**
**ஆதாரம் ஆம் சபை அருட்பெருஞ்ஜோதி (57 – 58)**

இம்மூவிரு அடிகளும் ஒரு தொடர். முதல் இரண்டு அடிகளில் ஆரணமும் (வேதமும்), இடையிரண்டு அடிகளில் வேதம் ஆகமம் ஆகிய இரண்டும் சொல்லப்பட்டன.

ஆரணம்(வேதம்), காரண காரியம் காட்டிடும்.

ஆகமம், ஏகம் அனேகம் எனப் பகரும்.

வேதம், ஆகமம் இவ்விரண்டின் விளைவுகளுக்கெல்லாம் ஆதாரமாகிய சிற்சபை, ஆரணச் சிற்சபையாகவும் இருக்கிறது; ஆகமச்சிற்சபையாகவும் இருக்கிறது; இரண்டிற்கும் ஆதாரமாக இருக்கிறது. சிற்சபை வேத சபையாகவும், ஆகம சபையாகவும், வேதாகம சபையாகவும் விளங்குகிறது.

வேதம் அறிவு நெறி. எதையும் காரண காரிய முறையில் ஆராய்ந்து தேர்வது. ஆகமம் அன்பு நெறி. இதனால் அறிவு இல்லாதது அல்லது அறிவு குறைந்தது என்பதன்று. வேத நெறியில் அறிவு மேலோங்கி நிற்கும். ஆகம நெறியில் அன்பு மேலோங்கி நிற்கும். அன்பு நெறி காரண காரியம் பார்த்தாலும் அவற்றில் முதன்மை கொள்ளாமல் எல்லாவற்றோடும் கலந்து உறவு கொண்டு விளங்கும். அறுபத்து மூன்று நாயன்மார்களுட்பலர் அன்பு நெறிக்கு உதாரணமாக விளங்கினர். கண்ணப்ப நாயனார் அன்புப் பிழம்பாகவே திரிந்தார். அன்புக்குக் கண்ணப்பர் என்றால், வறட்டு அறிவுக்குச் சிவகோசரியார். வறட்டு அறிவால் மட்டும் பயனின்று. அன்பும் சேர வேண்டும். அதனால் வேதம் ஆகமம் இரண்டையும் தனித்தனியே புகன்ற பெருமானார் வேதாகமம் என்று சேர்த்தும் கூறினார். வேதாகமகங்களின் விளைவுகளுக் கெல்லாம் ஆதாரமாக இருப்பது அருட்பெருஞ்ஜோதி என்றார்.

சிற்சபை வேதத்திற்கும் ஆதாரம், ஆகமத்திற்கும் ஆதாரம். முறையான வேதாந்த ஒழுக்கம், ஆகமாந்த (சிந்தாந்த) ஒழுக்கம், ஈற்றில் சமரச சுத்த சன்மார்க்கத்தில் கொண்டு போய்விடும். அங்கு அருட்பெருஞ்ஜோதியே ஆட்கொள்ளும்.

**“ஏகம் அனேகம் எனப்பகர் வெளியினும் ஆகமச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி”** என்னும் பெருமானின் வாக்குடன் **“ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க! ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க!!”** என்னும், மணிவாசகரின் வாக்கு (திருவாசகம்) ஒருங்குவைத்து எண்ணத்தக்கது.

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

## பாடலும் பொருளும்

**மனம்எனும்ஓர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்**
**மற்றவர்போல் எனைநினைத்து மருட்டாதே கண்டாய்!**
**இனமுறஎன் சொல்வழியே இருத்தியெனில் சுகமாய்**
**இருந்திடுநீ என்சொல்வழி ஏற்றிலைஆ னாலோ!**
**தினையளவுன் அதிகாரம் செல்லவொட்டேன் உலகம்**
**சிரிக்கஉனை அடக்கிடுவேன் திருவருளால் கணத்தே!**
**நனவில்எனை அறியாயோ யார்எனஇங் கிருந்தாய்**
**ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே!**

**– தத்துவவெற்றி(2)**

| | | |
|---|---|---|
| மனம் எனும் ஓர் | – | மனம் என்கின்ற ஒரு |
| பேய்க்குரங்கு மடைப்பயலே | – | பைத்தியக்காரக் குரங்காகிய மடப்பயலே, பைத்தியம் பிடித்த குரங்கான மடப்பயலே; |
| நீதான் | – | நீதானே |
| மற்றவர்போல் எனைநினைத்து | – | மற்ற எல்லாரையும்போல என்னை நினைத்துக் கொண்டு |
| மருட்டாதே கண்டாய் | – | மிரட்டாதே கண்டாய் என்பது நான் சொல்வதைக் கண்டுகொள் என்னும் குறிப்பு. |
| இனமுற | – | எனக்கு இனமாக; எனக்கு ஒத்தநிலையில் |
| என்சொல்வழியே | – | நான் சொல்லும் வழியில் |
| இருத்திஎனில் | – | நீஇருப்பதாக இருந்தால் |
| சுகமாய் இருந்திடு | – | சுகமாக இருந்துகொள் |
| நீ என்சொல்வழி ஏற்றிலை ஆனாலோ | – | நான் சொல்லும் வழியை நீ ஏற்கவில்லை என்றாலோ |
| தினையளவுன் அதிகாரம் செல்லவொட்டேன் | – | சிறிய தினையின் அளவுகூட உன்னுடைய அதிகாரம் செல்வதற்கு விட மாட்டேன். |
| உலகம் சிரிக்க உனை அடக்கிடுவேன் | – | உலகமே உன்னைப் பார்த்துச் |

| | | |
|---|---|---|
| | | சிரிக்கும்படியாக உன்னை அடக்கிடுவேன் |
| திருவருளால் கணத்தே | – | இறைவன் திருவருளால் கணநேரத்தில் (க்ஷணநேரத்தில்) இதைச் செய்து விடுவேன். உன்னை அடக்கிவிடுவேன். |
| நனவில் எனை அறியாயோ | – | உன் உணர்வில் என்னை நீ அறியாயோ? என்னை உனக்குத் தெரியாதா? |
| யார் என இங்கிருந்தாய் | – | என்னை யார் என்று எண்ணிக் கொண்டு நீ இங்கே இருக்கிறாய் |
| ஞானசபைத்தலைவனுக்கு நல்ல பிள்ளைநானே | – | ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானல்லவா |

மனத்திற்குக் குரங்கை உவமையாகக் கூறுவது மரபு. குரங்கு சிறிது நேரமாவது ஓரிடத்தில் தரித்திருக்காது. கிளைக் குக்கிளை மரத்துக்கு மரம் தாவிக்கொண்டே இருக்கும். சிறிது நேரம்கூட சும்மா இருக்காது. ஏதாவது சேட்டை (சேஷ்டை – குறும்பு; சிறுகுறும்பு) செய்துகொண்டே இருக்கும். குரங்குச் சேட்டை என்றே பெயர் உண்டாகிவிட்டது. மனத்தின் வேகத்திற்கு விஞ்சியவேகம் வேறொன்றும் இல்லை. ஒலிஒளிகளின் வேகத்தையும் விஞ்சக்கூடியது மனத்தின் வேகம். இங்கு நம்முடனேயே இருக்கும். கண் இமைக்கும் நேரத்திற்குள் சந்திரமண்டலத்திற்குத் தாவிவிடும். செவ்வாய் மண்டலத்தையும் தாண்டும். ஓரிடத்தில் தரித்திராமல் எந்நேரமும் அலைவதால் மனத்தைக் குரங்கு என்றனர் பெரியோர்.

வள்ளலாரும் மனத்தைக் குரங்கு என்று பல இடங்களிற் கூறியிருக்கிறார். இங்கே, இப்பாடலில் மனம் எனும் ஓர் பேய்க்குரங்கு என்றார். சாதாரணமாகவே குரங்கின் சேட்டைகள் பொறுக்க இயலாதவை. அக்குரங்குக்குப் பேய் பிடித்துவிட்டால் சொல்லவா வேண்டும்? சாதாரணக் குரங்கின் சேட்டைகளைவிடப் பேய்க்குரங்கின் ஆட்டம் அடங்காததாக, அடக்கமுடியாததாக இருக்கும். குரங்காட்டிகளைப் பார்த்திருப்பீர்கள். குரங்கைக் கட்டிவைத்து வளர்த்து, அதைக் கோல்கொண்டு ஆட்டிவைத்து வித்தை காட்டுபவர்களுக்குக் குரங்காட்டி என்று பெயர். மனிதர்களில் பல்லாயிரத்தில் ஒருவர் இருவர் இப்படிக் குரங்காட்டிகளாக இருப்பதைக் காணலாம்.

*ஆனால் மனிதர்கள் எல்லாருமே – அனைவருமே – மனக் குரங்கால் ஆட்டி வைக்கப்படுகிறார்கள். மனக்குரங்குக்கு ஆடாதவர்களே இல்லை. இதை வள்ளலாரே சொல்லுகிறார். மிக அருமையாகச் சொல்லுகிறார்.*

**தேட்டக்கண் டேர்மொழிப் பாகா உலகில் சிலர்குரங்கை**
**ஆட்டக்கண் டேன், அன்றி அக்குரங் கால்அவர் ஆடச்சற்றும்**
**கேட்டுக்கண் டேனிலை, நானேழை நெஞ்சக் கிழக்குரங்கால்**
**வேட்டுக்கொண் டாடுகின் றேன், இது சான்ற வியப்புடைத்தே.**

**– திருவருள்முறையீடு 73; 2243**

*என்று வியப்பாகப் பாடுகிறார். "நெஞ்சக்கிழக்குரங்கு" என்கிறார். கிழக்குரங்கு என்பதிலும் ஒருநயம் இருக்கிறது. சமீப காலத்தில் அண்மையில் புதிதாக வந்து சேர்ந்த குரங்கல்ல. இது நம் கூடவே பிறந்த குரங்கு. நமக்கு என்ன வயதோ அதே வயதுதான் நெஞ்சக்குரங்குக்கும். அதனால்தான் கிழக்குரங்கு என்றார்.*

*மேல் தத்துவவெற்றிப் பாடலில் பேய்க்குரங்கைப் பயல் என்றது போதாது என்பார்போலத் தொடர்ந்து மடைப்பயலே என்றார். மடம் – அறியாமை – ம(ா)டப்பயல் – அறியாமை மிகுந்த சிறுபையன். இம்மனத்தை ஞானசபை தலைவனாகிய இறைவனுக்கு நாம் நல்ல பிள்ளையாக இருத்தல். அஃதாவது நம் பெருமான் வகுத்தருளிய சுத்த சன்மார்க்க நெறியை சரியாக ஒழுகினால் அதனை அடக்கவும் செம்மைப்படுத்தவும் முடியும் என்பது உய்துணர வேண்டுவது. முதற்பாடலில் "தத்துவர்காள்" என்று எல்லாத் தத்துவங்களையும் பொதுவாக விளித்து எச்சரித்தார். இவ்விரண்டாம் பாடலால் மனம் கண்டிக்கப்பட்டது. இத்தலைப்பில் அடுத்துவரும் மூன்று பாடல்களும் மனத்தைக் கண்டிபனவே.*

**திருச்சிற்றம்பலம்**

**அருளுடைய பரம்பொருளே மன்றி லாடும்**
**ஆனந்த பெருவாழ்வே அன்புளோர்தம்**
**தெருளுடைய உளமுழுதும் கோயில் கொண்ட**
**சிவமே மெய்அறிவுருவாம் தெய்வமே இம்**
**மருளுடைய மனப்பேதை நாயினேன் செய்**
**வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்**
**இருளுடைய பவக்கடல் விட்டேறேன் என்னை**
**ஏற்றுவதற்கு எண்ணுகஎன் இன்பத் தேவே**

**– மகாதேவ மாலை**

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை உணவிற்கு | - ரூ.2,500/- |
| மதிய உணவிற்கு | - ரூ.6,500/- |
| இரவு உணவிற்கு | - ரூ.3,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | - ரூ.4,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | - ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) | - 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

## Please donate - Cheque / DD In favour of

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

## Please donate through:

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

## Please send MO to:

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது தருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

ஆண்டு சந்தா
**ரூ.120**

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். 5 வருட சந்தா ரூ.600/- தொடர்புக்கு: **8012680865**

*www.vallalarmission.org*
*vallalartrust@gmail.com*
*www.facebook.com/vallalarmission*
*Vallalarmission. Cell no: +91 99427 76351*





# கோசாலை

அன்பு உள்ளங்களே!



உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

**பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்**
**கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புக்கு: 8883590659, 7502026565**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly August 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).


அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை



அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா



அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

நாள்: 27-08-2017, ஞாயிற்றுக் கிழமை

இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 75020 26565, 99651 50531

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865